

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்தநாளையொட்டி, நேற்று (27.11.2023) மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்தநாளையொட்டி, நேற்று (27.11.2023), மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர்கள் க.பொன்முடி, தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, சி.வெ.கணேசன், மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் சட்டமன்ற – நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்தநாளையொட்டி, நேற்று மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் உள்ளனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்தநாளையொட்டி, நேற்று (27.11.2023), சென்னை – கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்த நாளையொட்டி, சென்னை – சி.ஐ.டி. காலனி இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தினார். அதுபோது, திருமதி ராஜாத்தி அம்மையார், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோரிடம் வாழ்த்துப் பெற்றார்.


Guidance TamilNadu

கலைஞர் 100 1924 - 2023

TAMIL NADU GLOBAL INVESTORS MEET - 2024



# பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய காலணி தொழிற்சாலை தொடக்க விழா

காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைப்பவர்

திரு **மு.க. ஸ்டாலின்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

ஓராண்டில்

28 நவம்பர் 2022 அடிக்கல் நாட்டியது

28 நவம்பர் 2023 உற்பத்தி தொடக்கம்

இடம்: எறையூர் சிப்காட் வளாகம்

நாள்: 28.11.2023

| முதற் கட்டம் | | 2028ம் வருடத்திற்குள் | |
|---|---|---|---|
| முதலீடு 400 கோடி ரூபாய் | வேலை வாய்ப்பு 4,000 நபர்கள் | முதலீடு 2,440 கோடி ரூபாய் | வேலை வாய்ப்பு 29,500 நபர்கள் |

செ.ம.தொ.இ/வரைகலை/1351/2023 www.investingintamilnadu.com investtn guidance_tn investintn